# பிரெஞ்சு சர்க்கார் வெளியேறும்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆடி 19உ செவ்வாய் (3—8—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆடி 20உ புதன் (4—8—54) | இதழ்: 43

## ஆகஸ்டு 14-ந் தேதிக்குள் இந்தியாவைவிட்டு பயணம்

### வெளியேறத் தயாராகுமாறு — அதிகாரிகளுக்குத் தாக்கீது

### புதுவை மக்கள் பெரு மகிழ்ச்சி

புதுவை, ஆக. 2—

புதுவை காரைக்கால் மக்கள் பிரெஞ்சு ஆதிக்கப் பிடியினின்றும் விடுதலை பெறுகிறார்கள். அவர்கள் நடத்திய அறப்போர் வெற்றி பெறுகிறது. புதுவை மக்கள் குதூகலிக்கிறார்கள்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியம் புதுவை காரைக்கால் பகுதியிலிருந்து ஆக 14-ந் தேதி வெளியேறிவிடத் தீர்மானித்துவிட்டதாகத் தெரிகிறது.

பிரெஞ்சு அதிகாரிகள் எல்லாம் குடும்பத்துடன் ஆக. 14-ம் தேதிக்குள் கப்பலேறத் தயாராகும்படி தாக்கீது அனுப்பப்பட்டுவிட்டதென்றும் தெரிகிறது.

காலனி, அரைக்காலனி நாடுகளாய் உலகிலே ஆதிக்கக்காரர்களின் பிடியில் சிக்கிச் சீரழிந்த நாடுகள் எல்லாம் இனியும் அடிமைக் காடுகளாய், கரண்டல் தளங்களாய், ஆதிக்கக் கோட்டைகளாய் வைத்திருக்கப்பட முடியாதென்பதை உணர்ந்து அறிவு பெற்ற, புன்முறுவலுடன் ஆதிக்கத்தை விட்டுக் கொடுத்து புகழ் தேடிக்கொண்டு வருகிறது பிரெஞ்சு சர்க்கார்—சின்னாட்களாக!

புதுவை கவர்னர் மேனன் தலைமையில் நடைபெற்ற எல்லா சர்க்கார் அதிகாரிகள் கூட்டத்தில், ஆகஸ்டு 14-ந் தேதியன்று பிரேஞ்சிந்தியாவை விட்டு வெளியேறுவது என்று முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

வெளியேற்றச் செய்தி வெகு வேகமாக காட்டுத் தீ பென மக்களிடையே பரவிற்று.

கண நேரத்தில், கடைகளிலிருந்த விலையுயர்ந்த சாமான்கள் எல்லாம் விலை போயின. கடிகாரங்கள், பட்டுத் துணிகள் போன்றவை கண் இமைக்கும் நேரத்தில் கடைகளிலிருந்து விற்பனையாகிவிட்டனவாம்!

பள்ளி மாணவர்கள் இச்செய்தியை இனிப்புகள் வழங்கிக் கொண்டாடினர்.

பிரெஞ்சுக்காரர்கள் வெளியேறும் செய்தி உண்மையென்றால் அது மிகவும் மகிழ்ச்சி தரக்கூடியது என்று இளைஞர் காங்கிரசின் காரியதரிசியும் வக்கீல்கள் சங்கத் தலைவருமான எஸ். பெருமாள் கூறினர்.

இதற்கான அதிகார பூர்வமான அறிவிப்புகள் இரண்டொரு தினங்களில் வெளியிடப்படும் என்று தெரிகிறது.

# படை திரட்டி அனுப்பத் தயார்!

—(:)—

## கூடி வாழ்வது கொத்தித் தின்ன அல்ல!

### நாகர்கோவிலில் பொதுச் செயலாளர் அண்ணதுரை முழக்கம்

"நான் இங்கு வந்திருப்பது இங்கு நடைபெறுகிற அறப்போரை ஆதரிக்கத்தான்; சென்னை சிறைச்சாலை அனுபவங்களை நாங்கள் அனுபவித்தாகிவிட்டது; இங்குள்ள சிறைச்சாலை அனுபவங்களை அனுபவிக்கத் தயாராக இருக்கிறோம்; இங்கு நடைபெறுகிற போராட்டத்தில், எல்லாக் கட்சிகளுடன் சேர்ந்து செயலாற்ற தி. மு. கழகம் தயாராக இருக்கிறது."

"ஒரு கம்யூனிஸ்டு நண்பர் என்னிடம் 'திராவிட நாடு கோருகிற நீங்கள், மலையாளிகள் கொடுமையை எதிர்த்து திருவாங்கூர் தமிழக மக்கள் நடத்தும் போராட்டத்தை ஆதரிப்பீர்களா?' எனக் கேட்டார். பெரும்பான்மையான மலையாளிகள், தமிழருக்கு அநீதி விளைவித்தால், அதையும் எதிர்த்துப் போராடுவோம்; அதுபோலவே, பெரும்பான்மையான தமிழர்களால் மலையாளிகளுக்கு தீங்கு நேர்ந்தால் அதையும் எதிர்த்துப் போராடுவோம்,"

"மயிலும், கிளியும், மாடப்புறாவும், சோலையிலே கூடி வாழட்டும் என்று நான் கூறினேன் என்றால், ஒன்றை யொன்று கொத்தித் தின்னவேண்டுமென்று கூறினேன்!"

என்று, நாகர் கோவிலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தி. மு. க. பொதுச்செயலாளர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"'யாதும் ஊரே யாவரும் கேளிர்.' 'எல்லோரும் இன்புற்றிருப்பதல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே,' என்ற தமிழனின் சொல்லைக் கண்டு அதற்கு நியாயம் வழங்க, நீதி வழங்க டில்லி சர்க்கார் தயாராக இல்லையே!

புதிய சீனாவிற்கு, கொரியாவிற்கு, வியட்நாமிற்கு நீதி கோருகிற நேரு பண்டிதர் தமிழனுக்கு நீதி வழங்காதது ஏன்?

திரு. நேசமணி சிறையில் இருந்து வெளிவரும் வகையில் போராட்டத்தை ஆதரிக்கவும், அவர் வெளிவந்தவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி சகல கட்சிகளும் சேர்ந்து கூட்டாக விவாதித்து பொதுவான வேலைத் திட்டத்தின்படி போராட்டத்தை நடத்துவோம். எல்லோரும் போராட்டத்தில் கலந்து கொள்ளத்தக்க நீதியில் கதவைத் திறந்துவையுங்கள்; போராட்டம் முடிகிற வரையில் கட்டுப்பாடுடன் நடந்துகொள்ளத் தயாராக இருப்பதற்கு அறிகுறியாக கையொப்பம் இட்டுத் தருகிறோம்.

"தாயகத்தில் இருந்தும் கூட 1,000 தொண்டர்களை அனுப்புகிறோம், இங்குள்ள சடக்கு முறைகள் யாவும் அங்கும் உண்டு. அப்படியானாலும், தமிழர்கள் தாயகத்துடன் சேர்ந்து வாழ்வதுதான் நல்லது."

'போராட்டத்தில் கலந்து கொள்ள தி. மு. கழகம் தயாராக இருப்பதின் அச்சாரமாக ஆகஸ்டு 6 ந் தேதியன்று நாகர் கோவிலிலும், செங்கோட்டையிலும், மணிக்கு ஒரு குழு வீதமாக அனுப்பப் போகிறோம்."

திருவாங்கூர் தமிழகப் போராட்டம் சட்டசபையில் இடம் பெறவோ, பதவிக்காகவோ. மந்திரி சபையைக் கவிழ்க்கவோ அல்ல!

எனக்கு திருவாங்கூர் தி. ந. காங்கிரசைப் பற்றிய பயமெல்லாம், நேரு சமிக்ஞை காட்டினாலும் ஓடிப்போகாமல் நிற்பார்களா என்ற ஓரே பயம்

(4-ம் பக்கம் பார்க்க)

### அண்ணதுரை— திரு-த. நா. கா. தலைவர் சந்திப்பு

★

தி மு க. பொதுச் செயலாளர் அண்ணதுரை, திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் அறப்போராட்ட இரண்டாவது தலைவர் குஞ்சன் நாடார் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., ஆகியோர் சந்தித்து, திருவிதாங்கூர் தமிழக அறப்போர் நிலைமை குறித்தும், திரு-தமிழக அரசியல் நிலை குறித்தும் பேசினர்.

தோழர் குஞ்சன் நாடார் அவர்கள் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசின் மற்ற தலைவர்களும் கலந்து கொண்டனர்.

அண்ணா அவர்களுடன் தோழர்கள் ஜான், மதுரை எஸ். முத்து ஆகியோர் இருந்தனர்.

### நாஞ்சில் தமிழர் அறப்போர்: தி. மு. கழக பங்கு

சென்னை, ஆக. 3—

நாகர்கோவிலில் 6—8—54-ல் நடக்கப்போகும் தி. மு. கழக அடையாள மறியல் நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக செயலாளர் தோழர் ஜான் மேற்பார்வையில் நடைபெறும். தோழர் மதியழகன் அதற்கான ஆரம்ப வேலைகளைச் செய்துவிட்டு இன்று சென்னை வருவார்.

நேற்று குறிப்பிட்டிருந்தபடி துணைச்செயலாளர் தோழர் மதியழகன் அறப்போரில் நேரடியாகக் கலந்துகொள்வார் என்ற செய்தி, தந்தியில் ஏற்பட்ட சிறு தவறின் காரணமாக வெளியிடப்பட்டதாகும்.

# டில்லியே, நியாயம் வழங்கு! நேரு சர்க்காரே, நீதி காட்டு!

## திருவாங்கூர் தமிழகப் பகுதிகளில் அண்ணதுரை – மதியழகன்

### ஆகஸ்டு 6-ல் அடையாள மறியல்

### நாகர்கோவில், செங்கோட்டையில் தொண்டர்கள் தயாராகின்றனர்

ஆகஸ்டு 6-ந் தேதியன்று நாகர்கோவில் கோர்ட் முன்பும் செங்கோட்டை கோர்ட் முன்பும் தி மு. கழக அறப்போர் வீரர்கள் செய்ய இருக்கும் 'அடையாள மறியல்' பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வெள்ளிக்கிழமையன்று பொதுச்செயலாளர் அண்ணா ஆற்றிய சொற்பொழிவை, திரு—கொச்சி தமிழக மக்கள் கலங்கரை விளக்கமாகக் கருதுகின்றனர்.

தி. மு. கழகச் செயல் வீரர்கள் புயலென ஓடி ஆடி ஆக்க வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

மறியலில் பங்கு கொள்ள பதிவு செய்துகொள்ளும் அறப்போர் வீரர்களின் தொகை மளமளவென வளர்கிறது.

"டில்லியே, நியாயம் வழங்கு! நேரு சர்க்காரே, நீதி காட்டு! டில்லியே, தமிழர்—மலையாளி பகையை மூட்டி விடாதே! அடக்கு முறை ஆட்சி ஒழிக! தமிழாட்சி வாழ்க!"

(4-ம் பக்கம் பார்க்க)

### திரு—கொச்சி மந்திரி சபை

#### நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேறியது

#### காங்கிரஸ் ஆதரவு

திருவனந்தபுரம், ஆக. 2—

திரு—கொச்சி சட்டசபையில் சர்க்கார் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேறியது. தீர்மானத்திற்கு ஆதரவாக 62 வாக்குகளும், எதிராக 40 வாக்குகளும் கிடைத்தன. காங்கிரஸ் உறுப்பினர்கள் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர் என்று தெரிகிறது.

அட்லாண்டிக் சமுத்திரத்தில் இரண்டு கனடிய ஜெட் விமானங்கள் ராம்டோர்ப் என்னும் சொரூபத்துக்கு மோதிக்கொண்டதின் விளைவாக ஐந்து பேர் மாண்டனர் என்று தெரிகிறது.

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணுதுரை

சென்னை 3—8—54 செவ்வாய்


# வீணாசை—விபரீதம்!

கோவாவில் உள்ள இந்திய தூதுவர்களை 'அவர்கள் போக்கு சரியில்லை,' என்று கூறி, வெளியேறுமாறு போர்ச்சுக்கல் அரசு உத்தரவிட்டுவிட்டது.

இதன் எதிர்செயலாக இந்திய சர்க்காரும், பம்பாயில் உள்ள போர்ச்சுகிசியத் தூதுவர்களை வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளனர்.

இரு நாடுகளிடையேயும் ராஜீய உறவுகள் முறிந்து போகும் அளவிற்கு நிலைமைகள் வளர்ந்துவிட்டிருக்கின்றன.

இந்த நிலைமைகளுக்குக் காரணம், ஆதிக்க மனப்பான்மையுடன், உலகப் போக்கினை சரிவர உணராது நடந்துகொள்ளும் போர்ச்சுக்கல் அரசின் கண்ணியமற்ற போக்குதான் என்பது, சொல்லித் தெரிய வேண்டியதில்லை!

இந்திய உப கண்டத்து மண்ணிலே போர்ச்சுகலுக்கு ஆதிக்கம் இருக்க வேண்டுமென்பது சிறிதளவும் நியாயமான கோரிக்கை அல்ல!

காலனி ஆதிக்கத்தின் சிறந்து விளங்கிய நாடுகள் கூட, காலனி மக்களிடையே எழுந்துள்ள விடுதலை கிளர்ச்சியைக் கண்டு தங்கள் போக்கினை மாற்றிக்கொண்டுவிட்டன!

'சூரியனே மறையாது,' என்று பெருமிதத்துடன் கூறிய ஆங்கில சாம்ராஜ்யம், தனது ஆதிபத்திய எண்ணத்தைக் கைவிட்டுவிட முடிவு செய்துவிட்டது.

படைகளையும், போர்க் கருவிகளையும் அனுப்பி டூனிஷியாவில் மக்கள் கிளர்ச்சியை அடக்கிவந்த பிரெஞ்சு அரசாங்கம் அங்கே சுயாட்சி பிரகடனம் செய்கிறது.

பிரெஞ்சு மந்திரி சபையின் எதிர்ப்புகளைச் சமாளித்து மெண்டஸ் பிரான்ஸ் டூனிஷியாவிற்கு அரசியல் சுதந்திரம் வழங்கவேண்டுமென்ற தனது கோரிக்கையில் வெற்றிபெற்றிருக்கிறார்.

பிரெஞ்சிந்தியப்பகுதிகளில் விடுதலைக் கிளர்ச்சியை அடக்க பலவிதமான அடக்குமுறைகளைக் கையாண்டு, பிரெஞ்சிந்தியாவில் உள்ளவர்களில் சிலர் மனதை மயக்கி, சர்க்காருக்குஆதரவாகக்கட்சிஒன்றை உருவாக்கி, சர்க்காருக்கு பிரெஞ்சிந்திய மக்களிடையே ஆதரவு இருக்கிறது என்று சாகசம் செய்துவரும் பிரெஞ்சிந்திய கவர்னர் மேனூர்டின் போக்கு சரியானதல்ல என்பதை உணர்ந்துகொண்ட பிரான்ஸ், மேனூர்டை திரும்பி அழைப்பதைப்பற்றி யோசனை செய்வதாக செய்தி கிடைக்கிறது.

இந்தோ-சீனு டூனிஷியா முதலிய நாடுகளில், காலனி எண்ணத்தைவிட்டு ஜனநாயகப் பண்போடு காரியமாற்றிய மெண்டஸ் பிரான்ஸ், பிரெஞ்சிந்திய விடுதலை கோரிக்கையும் நோக்கும் நியாயத் திற்கும் கட்டுப்பட்டு நடப்பார் என்றுஉலகம் எதிர்பார்க்கிறது.

ஆனால், பிரெஞ்சைவிட மிகச் சிறிய வியப்பன ஏகாதிபத்தியம் மட்டும் தனது பிடிவாதத்தைத் தளர்த்தியதாகக் காணேம். போர்ச்சுகிசிய இந்தியப் பகுதிகளைவிட்டு வெளியேற மறுப்பதுடன் அரசியல உறவுகளை அறுத்துக் கொள்ளும் நிலைக்குப்போய்விட்டது.

அப்படியானல், லிஸ்பன், கடைசிவரை போராடிப் பார்க்கத் திட்டமிட்டுவிட்டதா?

தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த ஐரோப்பிய பாதுகாப்பிற்காக நிறுவப்பட்ட வடக்கு அட்லாண்டிக் பாதுகாப்பு குழுவை அணுகி உதவி பெறலாம் என்று போர்ச்சுக்கல் அரசு நினைக்குமானல், இந்தியாவில் உள்ள தங்கள் பகுதிகளைக் காப்பாற்ற அமெரிக்கத் துருப்புகள் வருமென்று நம்புமானல், அவையெல்லாம் வீணான எண்ணங்கள் — விபரீத ஆசைகள் என்று லிஸ்பன் சர்க்காருக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

அமெரிக்காவோ, அல்லது ஏகாதிபத்தியம் என்ற சொல்லின் உச்சரிப்புக்கு தன்னை ஒரு காலத்தில் உயர்த்திக்கொண்டிருந்த பிரிட்டனே, இந்தோனேஷியா, டூனிஷியா போன்ற இடங்களில் மக்கள் எழுச்சியை மதித்து பிரெஞ்சிந்தியாவிலிருந்து வெளியேற நாள் பார்த்துக் கொண்டிருக்கும் பிரான்சோ, தனக்கு உதவ முன்வரும் என்று லிஸ்பன்சர்க்கார் எண்ணுவது இன்றிருக்கும் சர்வதேசிய நிலைக்கு முரணனது.

பிரிட்டனும், பிரான்சும் தங்கள் தங்கள் பொருளாதாரத்தையே சரி செய்ய முடியாமல் அமெரிக்காவை நோக்கிக் கொண்டிருக்கின்றன. அமெரிக்காவோ, ஆசியாவில் சைனுவின் ஆதிபத்தியம் வளருவது கண்டு பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது. இந்தோசைனுவின் முடிவே அமெரிக்காவிற்குப் பிடிக்கவில்லை. இந்த நேரத்திலே இந்திய அரசாங்கத்தோடு வேறு விரோதத்தைச் சம்பாதித்துக்கொண்டால், ஆசியா கண்டத்திற்குள்ளேயே, அமெரிக்காவிற்கு இடமில்லை.

ஆகவே, கோவாவிற்கும், டையுக்கும் டாமனுக்கும் என்று துருப்புகளை எடுத்துக்கொண்டுவந்து ஆசியாவையே இழக்க அமெரிக்கா ஒரு நாளும் சம்மதிக்காது.

இந்த அரசியல சதுரங்கம் ஒருபுறமிருக்க, மனிதன் ஜனநாயக காமைகக் கொண்டு பிடித்த உண்மையை லிஸ்பன் வாசிகள் மறக்கக்கூடாது.

'நேட்டோ' அமைப்பைச் சேர்ந்த நாடுகள் என்றுலும், அல்லது போர்ச்சுகலின் காலனிகளைப் பாதுகாக்க விரும்பும் நாடு எதுவென்றுலும், மக்களின் உள்ளத்தில் உணர்ச்சி கிளம்பி, வெறி ஏறி வெளிப்படும் உரிமைப் போரை அடக்க நினைத்தால் பெருத்த ஏமாற்றமே அடைவார்!

இப்போதே பல கிராமங்கள் போர்ச்சுகீசிய ஆதிக்கத்தை வெளியேற்றி விட்டு விடுதலை சர்க்காரை அமைத்துள்ளன.

அவசர உணர்ச்சியுடன் நடந்துகொண்டு மக்களைத் தாக்கி, அதே சமயத்தில் உலக மக்களின் முன்னே நியாயவான்கள் போல பேச, லிஸ்பன் சர்க்கார் முயற்சிக்கிறது.

ஏகாதிபத்தியவாதிகளின் பேச்சைக் கேட்க இன்று உலகம் தயாராயில்லை என்ற உண்மையும் லிஸ்பன் வாசிகளுக்குத் தெரிய வேண்டும்.

அரசியல் பிரச்சினைகளில் அவசர உணர்ச்சியும், நிலைமைகளை சீர்தூக்கிப் பார்க்க மறுக்கும் பண்பும் என்றுமே நல்ல பயனைத் தராது என்பது பொது உண்மையாகும். மேற்கத்திய நாடுகள் பல தங்கள் காலனிகளைப் பற்றிய பிரச்சினைகளில் சில நேரங்களில் அவசர உணர்ச்சியுடன் நடந்துகொண்டு தக்க பாடம் கற்றிருக்கின்றன.

இதற்கு, வரலாற்றைப் புரட்டிட போர்ச்சுகல் ஆதிபத்தியத் தலைவர்கள் பார்க்கத் தேவையில்லை. கடந்த சில ஆண்டுகளாக நம் கண் முன்னாலேயே நடந்துவரும் அரசியல மாறுதல்களை எண்ணிப் பார்த்தாலே போதும்!

காலப் போக்கினை உணர்ந்து, மேற்கத்திய வல்லரசுகள் தங்கள் கொள்கையை உடனே மாற்றிக் கொள்ள வேண்டும்!

மனித குலத்தின் முன்னேற்றத்திற்கு அது மிக உதவி செய்யும்!

பழம் பெருமையை நினைத்து ராஜீய உறவை ரத்து செய்து, மிரட்டி உருட்டி காரியம் சாதிக்கப் பார்த்தால், பெருத்த ஏமாற்றம் ஏற்படுவது மாத்திரமல்ல; உலக முன்னேற்றம் இன்னும் சில ஆண்டுகளுக்கு பாதிக்கப்படும். வெறும் புணர்ச்சி இன்னும் வளரவும் சந்தர்ப்பம் ஏற்படலாம்!

இவைகளை உணர்ந்து போர்ச்சுகலும், பிரான்சும் காரியமாற்ற வேண்டும்—அதுவும் விரைவில்!

இல்லையேல், 'வீணாசை—விபரீதம்' என்பதை போர்ச்சுகல் உணர்ந்துகொள்ளுவதற்கு அதிக நாள் பிடிக்காது!

# "தனி நாடு வேண்டும்!"— நாகர்கள் கிளர்ச்சி வலுக்கிறது

(ப வாணன்)

"எங்களுக்குத் தனி நாடு வேண்டும்"

"அந்நியர் மொழி எங்கள் நாட்டில் அடி வைக்க விடோம்!"

"எங்கள் மொழி, பண்பு, கலாச்சாரம் எல்லாம் உயர்ந்தது; இதைக் காப்பாற்றுவது எங்கள் கடமை!"

இப்படியெல்லாம் தி. மு. கழகம் மாத்திரம்தான் கூறுகிறது என்று எண்ணிவிடாதீர்கள்!

நாகர்கள் கோபித்துக் கொள்வார்கள்!

பண்டிதரின் புன்முறுவலுக்கும், பிரசாத்தின் பரிபக்குவ பேச்சிற்கும் மயங்கி அடிமைப்பட்டுப் போகவில்லை, அந்த மலைவாசிகள்!

"ஒன்றுபட்ட இந்தியாவில் நாங்கள் இருக்க முடியாது; எங்களுக்குத் தனி நாடு வேண்டுமே!" என்ற முழக்கம், இன்று, கிழக்கு அஸ்ஸாம் பூராவும் கேட்கிறது! வலுத்துக் கொண்டே இருக்கிறது!!

இந்தியாவின் வடகிழக்கு எல்லையில், பர்மாவிற்கும்—பாகிஸ்தானுக்கும் இடையில் பிரம்மபுத்ரா நதி வெளியில் இருக்கும் அஸ்ஸாம் ராஜ்யம், உலகத்திலேயே அதிகமான சராசரி மழையை அடையும் பிரதேசம்! அஸ்ஸாமின் பெரும் பகுதி மலை, காடு அடங்கியது!

இந்த ராஜ்யத்திலே இருக்கும் ஆறு பெரிய மலைப் பகுதிகள், ஜெயந்தியா, காரோ, மீசுரம், மிகார், வடக்குக் கச்சார் நாகா என்பவை. இந்த ஆறு மலைப்பகுதிகளும் வெள்ளையன் காலத்திலேகூட தனிப்பட்ட வாழ்க்கையிலே, வெளி உலகத்தோடு தொடர்பற்று இருந்தவைகள்தான். இதிலே நாக மலைநாடு பர்மாவின் எல்லைக் கோடிவிருக்கிறது.

இந்த ஆறு மலைவாசிகளும் மறுபுறத்தில் பர்மா எல்லைக்குள் இருக்கும் மலைநாட்டோடு தொடர்பு கொண்டவர்கள்—ஒரே இனத்தவர்கள்!

பூகோள, வரலாற்று முறைப்படியும், கலாச்சார, இன விதிப்படியும் அஸ்ஸாம் மலை நாட்டினரும், பர்மாவின் எல்லைக்குள்ளிருக்கும் மேற்கு மலை நாட்டினரும் ஒன்றாக வாழ வேண்டியவர்கள்!

ஆனல், அரசியல் மாறுபாடுகள் காரணமாக பிரிக்கப்பட்டு தனித்து வாழ வேண்டியவர்களாயினர்!

உலகப் போருக்குப் பின் இந்தியா—பர்மா சுதந்திரம் வழங்கப்பட்டபோது, மலைவாசிகளில் அரசியல் தெளிவு பெற்றோர் தங்கள் உரிமைக் குரலை எழுப்பினர். ஆனல், கிடைத்த தலைவர்களிடம் நல்லெண்ணம் சம்பாதிக்க ஆசைப்பட்ட வெள்ளையன், மக்களின் உரிமைக் குரலைக் கவனிக்காமல், டெல்லிக்கும், ரங்கூனுக்குமாக, மலை நாடுகளை கொடுத்துவிட்டுப் போய்விட்டான்!

சுதந்திரம் பெற்ற இந்தியாவும், பர்மாவும் புதுப் புது அரசியலமைப்பை ஏற்படுத்தின!

இந்திய அரசியலமைப்பில் அஸ்ஸாம் மலைவாசிகளைப் பற்றி தனியான அருபந்தம் ஒன்றும் சேர்க்கப்பட்டது. இந்திய அரசியல் சட்டம் ஆறாவது அருபந்தத்தின் படி, அஸ்ஸாமின் ஆறு மலைநாடுகளும், தனித்தனி மாவட்டங்களாகப் பாவிக்கப்பட்டு, ஆறு மாவட்ட நிர்வாகக் குழுவின்கீழ் ஒப்படைக்கப்பட வேண்டும். இந்த நிர்வாகக் குழுக்கள் ஷில்லாங்கில் இருக்கும் அஸ்ஸாம் மாகாண அரசாங்கத்திடமிருந்து பண வசதிபெற்று, அந்தந்த மலை மாவட்டங்களில் தேவையான நிர்வாக வேலைகளைச் செய்யும்.

இப்படி அமைக்கப்பட்ட மாவட்டக் குழுக்கள் பத்து ஆண்டுகளில் மலை ஜாதியினரை முன்னேற்றமடையச் செய்து அஸ்ஸாம் மாகாண மக்களோடு ஒன்று சேரச் செய்ய வேண்டும் என்பதும் அரசியல் சட்ட விதிகளில் ஒன்றாகும்.

இப்படி ஓரளவுக்கு உள்நாட்டுச் சுதந்திரம் அளிக்கும் அரசியல் சட்டத்தைக்கூட நாகமலைப் பிரதேசம் ஒத்துக்கொள்ளவில்லை.

"இந்தியனும் வேண்டாம், பர்மியனும் வேண்டாம்! நாக நாடு வேண்டும்!" என்று எல்லா மலைநாடுகளும் சேர்ந்த தனி நாட்டை உண்டாக்க பிரச்சாரம் செய்தனர்! 'மாவட்டக் குழுக்களில் சேராதீர்!' என்று முழக்கமிட்டனர்!

நாகர்களின் உணர்ச்சி மலைப் பிரதேசங்கள் பூராவும் எதிரொலித்தது.

பர்மிய அரசாங்கம், மலைப் பிரதேசங்களுக்கு தனியான பட்டாளம் ஒன்றை அனுப்பியது!

இந்திய அரசாங்கம் நாக நாட்டிலே கருங்காலிகளை உண்டாக்க முயன்றது!

'அரசியல் சட்டம்' என்றனர், அஸ்ஸாமிலிருந்து சென்ற ஐந்தாம் படையினர்!

'உரிமைப்போர் நடத்தும்போது, அரசியல் சட்டம் நினைவுக்கு வருவதே, தவறு!' என்றனர் நாக நாட்டினர்!

'போர்!' என்று அறைகூவிட்டனர்! புயல் கண்டு அஞ்சினர், டில்லி ஏகாதிபத்தியவாதிகள்!

நாக நாட்டைத் தவிர்த்த மற்ற ஐந்து மலை நாடுகளில், கிடைத்த ஒரு சில மலைவாசிகளைக் கொண்டு மாவட்டக் குழுக்களை நியமித்தது, நேரு சர்க்கார், இரண்டாண்டுகளுக்கு முன்பு!

அஸ்ஸாமின் மலைப்பகுதி பிரச்சினைகளை தீர்த்துவிட்டோம் என்று எண்ணி திருப்தியடைந்தது, டில்லி! ஆனல், நாகர்கள் போராட்டம் தொடர்ந்தது!

ஜெயந்தியா, காரோ மலைப்பகுதிகளில் உரிமைக் குரல் வலுத்தது!

மீசுரம் மலைவாசிகள் நாகமலையிலிருந்து விடுதலை வீரர்கள் என்ன கட்டளையிடுகின்றனர் என்று எதிர்பார்த்தனர்! அஸ்ஸாமிய மொழியை படிக்க மறுத்தனர்!!

இதுபோல் பர்மிய எல்லைக்குள்ளும் மலை

(4-ம் பக்கம் பார்க்க)

# செய்திச் சுருள்

## சென்னை தமிழாசிரியர் கழக உறுப்பினர் கூட்டம்

18—7—54-ல் சென்னை பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் சென்னைத் தமிழாசிரியர் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. தில்லை மாநாட்டுத் தீர்மானங்களை ஆராய்ந்து அவற்றைச் செயல்முறைக்குக் கொண்டு வருவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை ஆராய்ந்தனர் சென்னை மாநிலத் தமிழாசிரியர் கழகத்தை நல்ல முறையில் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது பிறகு புலவர் மயிலை சிவமுத்து தலைவராகவும், புலவர் என். எஸ் அருணகிரிநாதன், பண்டிதர் கிருஷ்ணவேணி அம்மையார், புலவர் அன்பு கணபதி ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், புலவர் க. சண்முகம், புலவர் அம்மை சங்கரன் முதலியோர் செயலாளர்களாகவும், புலவர் பி.என். சண்முகம் பிள்ளை பொருளாளராகவும், செயற் குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## விழுப்புரம் கஸ்பாபிர்க்கா உழவர் கட்சி ஆரம்ப விழா

27—7—54 மாலை 6 மணிக்கு கண்டமானடி கிராமத்தில் தமிழ் நாடு உழவர் கட்சித் தலைவர் திரு வி கோபாலகவுண்டர், எம். எல். ஏ தலைமையில் கூட்டம் நடைபெற்றது திருக்குறளார் வி. முனுசாமி, எம். பி, ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. ஆகிய பிரமுகர்கள் தமிழ் நாடு உழவர் கட்சி உருவாக்கியதின் நோக்கத்தைப் பற்றியும், எதிர்கால ஜில்லா போர்டு தேர்தலில் வாக்காளர்கள் நடந்துகொள்ள வேண்டிய திட்டத்தையும் விளக்கியதுடன், உழவர் கட்சிக்குரிய சின்னத்தை கூடிய சீக்கிரமே தெரிவிப்பதாகவும், உழைப்பாளி கட்சி காங்கிரசில் பிணைபட்ட விவரத்தையும் விளக்கினர். தலைவர்கள் முன்னிலையில் கஸ்பா உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## திருச்சி சங்கரன் படிப்பகத் திறப்பு விழா

### பொதுக்கூட்டத்தில் தோழர்கள் முழக்கம்

18—7—54 மாலை 5 மணிக்கு தோழர் என். குழந்தைவேலன் தலைமையில் மெயின்காட் கேட்டிலிருந்து தொண்டர்கள் அணிவகுத்து ஊர்வலமாகப் புறப்பட்டு பல வீதிகளின் வழியாகச் சென்று தோழர் சங்கரன் படிப்பகத்தை அடைந்தது: தோழர் ஈ வெ கி சம்பத் அவர்கள் சங்கரன் படிப்பகத்தைத் திறந்து வைத்தார்

மாலை 6-30 மணிக்கு உறையூர் தி. மு. க. தோழர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அலங்கார பந்தலில் தோழர் எம் எஸ் மணி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர்கள் குழந்தைவேலன், சின்னையன், சக்தி, தங்கவேலு ராமு, அனிபா ஆகியோர் பேசிய பின்னர் தோழர் ஈ வெ. கி. சம்பத் நீண்டநேரம் விரிவுரையாற்றினார்.

## திருக்குறள் விழா

25—7—54 மாலை 6 மணிக்கு பொன்மலை திருக்குறள் கழகச் சார்பில் 'திருக் குறள்' தொடக்க விழா நடைபெற்றது. தோழர் நம்புசாமி 'அறவழியுறுத்தல்' என்னும் பொருள் பற்றியும், திரு கெ. ஆர் கந்தசாமி அவர்கள் "அன்பின் வழியது உயர் நிலை" என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

## சமையல் வகுப்பு ஆரம்பம்

புத்தகப் படிப்போடு மட்டும் நில்லாமல் குறிப்பாகப் பெண் குழந்தைகளின் வாழ்க்கைக் கேற்ற முறையில் பிரகாரத்தில் உபயோகப்படும்படியாய் சமையல் முறை, சிசு சம்ரட்சணை, முதல் உதவி, குடும்பப் பரிபாலனம் போன்ற துறைகளில் பயிற்சி அளிப்பதற்கென புது வகுப்பு ஒன்று மாதுங்கா உயர்தர ஆரம்ப தமிழ் முனிசிபல் பள்ளியில் 17—7—54 சனிக்கிழமையன்று பம்பாய் முனிசிபல் கல்வி அதிகாரி குமாரி கபிலா காந்து வாலா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது

## பிரெஞ்சிந்திய இணைப்பு ஆதரவு

### சர்வ கட்சி பொதுக் கூட்டம்

25—7—54 மாலை 6½ மணிக்கு நாகூர் அருகிலுள்ள மேலவாஞ்சூர் கொத்தவால் குள காமராஜ திடலில் ஜனாப் வி. டி. செய்யது காசிம் சாயபு தலைமையில் நடைபெற்றது.

பிரெஞ்சிந்திய பகுதிகளான காரைக்கால், புதுச்சேரி ஆகியவைகள் இந்திய தாயகத்தோடு இணைய வற்புறுத்தியும், பிரெஞ்சிந்திய சர்க்காரின் அடக்குமுறை வெறியாட்டத்தைக் கண்டித்தும் தோழர்கள் பலர் பேசினர். முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சவுந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பகம்

### கல்லூரணியில் திறப்புவிழா

12—7—54 பகல் 11 மணிக்கு தோழியர் டபள்யூ பி ஏ எஸ் விஜயபதி சுகவனேசன் தலைமையின் மேற்படி படிப்பகத் திறப்பு விழா நடைபெற்றது தோழியர் புஷ்பம் ரெத்தினம் படிப்பகத்தைத் திறந்து வைத்தார் தோழர் எஸ் கணேசன், சொற்பொழிவாற்றினார். தோழர் க. அ புஷ்ணமுத்து வரவேற்புரையும், தோழர் ஐ என். நடராசன் நன்றியுரையும் நவின்றனர்.

## நாகை பகுத்தறிவுப் படிப்பகம்

27—7—54-ல், நாகை தி. மு கழகக் கட்டிடத்தில் படிப்பகத்தின் செயற்குழு கூட்டம் தோழர் கே வி ராமன் தலைமையில் நடைபெற்றபோது, சென்னை மாநில வேர்களின் சம்பளம் அதிகமாக இருப்பதைக் கண்டித்தும், சம்பளச் செலவை உடனடியாக குறைக்க சென்னை அரசியலாரைக் கோரியும், 'தினத் தந்தி'யின் முறையற்ற போக்கைக் கண்டித்தும, மற்றும் பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## இலவச மருந்துசாலை திறப்பு விழா

பரவை தி மு க கிளை தானமுத்து-நடராசன் நினைவுப் படிப்பகத்தாரால், திருவக்கரை இலவச மருந்துசாலை பரவைக் கிராமத்தின் பஞ்சாயத்து தலைவர் என். சோணமுத்து அவர்களால் 25—7—54ல் திறந்து வைக்கப்பட்டது.

## 72 மணி நேர சைக்கிள் சவாரி

தி. மு கழகத் தோழர் என். என். மணி அவர்களால் குருவிக்காம்பை சினிமாக் கொட்டகைக்கு எதிரில் உள்ள திடலில் 72 மணி நேரம் இடைவிடாமல் சைக்கிள் சவாரி செய்து வெற்றி பெற்றார்.

## சென்னை ஓட்டல் தொழிலாளர் சங்கம்

24—7—54-ல் ஓட்டல் தொழிலாளர் சங்கப் பொதுச் சபைக் கூட்டம் சிந்தாதிரிப்பேட்டை சேர்ந்த சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பொது வேலை நிறுத்தத்தைப் பற்றி 2 மணி நேரம் விவாதித்தப்பின், சென்னை தொழில் மந்திரி பக்தவத்சலம் அவர்கள் தமது கோரிக்கையை சீக்கிரம் கவனிப்பதாக வாக்குறுதி அளித்திருப்பதால் பொது வேலை நிறுத்த வாக்கெடுப்பதை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது. ஓட்டல் முதலாளிகள் சங்கத் தலைவர் திரு. வசந்தலால் குப்தா, ஓட்டல் தொழிலில் லாபமில்லை என்று பேசியதைக் கண்டிக்கப்பட்டது.

## தென் பகுதி இரயில்வேமேன் யூனியன் திருவண்ணாமலை (கிளை)

18—7—54-ல் மேற்படி கிளையின் உறுப்பினர்கூட்டம் தோழர் டி. கிருஷ்ணசாமி பிறந்த தின விழாவைபொட்டி, எம். அய்யப்பா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் குஞ்சிதபாதம், சி. இராகவானந்தம் ஆகியோர் தோழர் கிருஷ்ணசாமி சேவையைப் பாராட்டிப் பேசினர்.

## நடிகர்களுக்கு வரவேற்பு

திருநெல்வேலி, ஜூலை 30—

20—7—54 மாலை 6 மணிக்கு நடிகர்கள் எம். ஜி. சக்ரபாணி, எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோருக்கு நெல்லை திருவள்ளுவர் கழக சார்பில் நெல்லை லாட்ஜில் விருந்தும் வரவேற்பும் நடந்தது. அ. க. நடராசன், மதுரை முத்து, சிங்கை கந்தசாமி ஆகியோரும் கலந்து கொண்டார்கள். திருவள்ளுவர் கழகத்தின் சார்பாக வாழ்த்திதழ் வாசித்தளிக்கப்பட்டது. திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், நெல்லை மாவட்ட தி மு. கழகம் திருவள்ளுவர் கழகம் ஆகியவற்றின் சார்பாக மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. பாருக் என்ற சிறுவன் கைக்குட்டையை எம். ஜி பாருக்கு அளித்தான்.

இரவு 9-30 மணிக்கு நெல்லை சங்கீத சபாவில் ஆர்க்காடு நகர் வர்த்தக சங்க நிதிக்காக "இன்பக் கனவு" என்ற நாடகத்தை எம் ஜி ஆர். குழுவினர் நடித்தனர்.

## பகுத்தறிவு கலா நிகழ்ச்சி

திருத்துறைப்பூண்டி தாலூக்காவில் சித்தமல்லி சுப்பிரமணியம் குழுவினரின் பகுத்தறிவு கலா நிகழ்ச்சி 4—8—54 புதன் கிழமை முதல் அவணி 9-8-54 திங்கட்கிழமை வரை மூன்னர் அறிவித்தபடி நடைபெறும்.

## பிரிவுபசார விருந்து

திருச்சி அகில-இந்திய தபால் காரர் கீழ்த்தர ஊழியர் சங்க ஆர். எம். எஸ். டி, டிவிஷன் கிளையின் சார்பில், திருச்சி ஆர். எம் எஸ். டி. சூப்பிரண்டெண்ட் திரு என். ராகவன் உத்தியோக உயர்வு பெற்று சென்னை செல்லுவதை முன்னிட்டு, திரு கே எம் சந்திரசேகர் தலைமையில் பிரிவு உபசார தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

* * *

திருச்சியிலிருந்து கோவைக்கு மாற்றலாகிச் செல்லும் டி. பி டி. டபிள்யு திருச்சி லைன் ஸ்டாப் கிளை தலைவர் தோழர் டி. வி வி சுப்ரமணியம் அவர்களுக்கு திருச்சியிலுள்ள பல்வேறு கிளைகளை சேர்ந்த தோழர்களும் ஒரு பிரிவு உபசார தேநீர் விருந்து 23—7—54-ல், தோழர் சு. வெங்கட்ட பெருமாள் தலைமையில் ராஜ்நகர் ஹாலில் நடத்தினார்.

## "நச்சுக்கோப்பை"—நாடகம்

14—7—54ல் கள்ளியூர் தி மு கழகச் சார்பில் தோழர் சி. பி சிற்றரசு தலைமையில் பகுத்தறிவு மன்றத்தாரால் "நச்சுக் கோப்பை" என்னும் நாடகம் நடைபெற்றது

அதுபோது தி. மு கழகச் செயலாளர் முன்னிலையில் மும்முனைப் போராட்ட வெற்றி விழாவும் நடைபெற்றது.

## 'தவறியவள்' (நாடகம்)

24—7—54 சனி மாலை 7-30 மணிக்கு, சென்னை வண்ணைபம்பதி தியாகராயர் கல்லூரி மைதானத்தில் மதுரை தமிழ்ச்செல்வி அரங்கத்தார் நடத்திய 'தவறியவள்' என்னும் சமூக நாடகத்திற்கு தோழர் கே. ஏ. மதியழகன் தலைமை வகித்தார்.

நாடக முடிவில் தமிழ்ச் செல்வி அரங்கத்தின் சார்பில் தோழர் கே. ஏ. மதியழகனுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது சென்னை வண்ணையம்பதி தி. மு கழக சார்பில் தோழியர் பி எஸ் செல்வா-தோழர் பி என். கலைத்துரை ஆகியோருக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. தோழர் மதியழகன் பேசுகையில் 'தவறியவள்' நாடக நடிகர்களைப் பாராட்டியும். நாடகங்களினால் சமுதாய சீர்திருத்தம் ஏற்படுமென்றும் எடுத்துக் கூறினார்.

## குழந்தை இலக்கியக் கழகம்

குழந்தை இலக்கியக் கழகத்தின் 4-வது ஆண்டு பொதுக் கூட்டம் 11—7—54 ஞாயிறு மாலை 3 மணிக்கு ஜெ. சந்திரசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பெற்றனர் :-

தலைவர்: ஜெ சந்திரசன்: செயலாளர்: பூவண்ணன்; துணைச் செயலாளர்: இ எஸ் ஹரிஹரன்; பொருளாளர்: பூ. குருசாமி; நிர்வாகக் குழுவினர்: புலவர் கலைச்செழியன், நீலமணி. க சந்திரன், ப. ராசவேந்திரன், க. மோகனகிருஷ்ணன்.

## திருக்குறள் சொற்பொழிவு

சென்னை இராயபுரம், சபாநாயகர் சிவசண்முகம் பிள்ளை மாளவர் இல்லத்தில் 18-7-54 மாலை 5 மணிக்கு தோழர் கே. பி. மேனன் தலைமையில் தோழர் இ இ த. தட்சிணாமூர்த்தி அவர்களால் திருக்குறளின் மேன்மை பற்றி சொற்பொழிவாற்றப்பட்டது, பின்னர், டாக்டர் வி எம். பிள்ளை தோழர் சி. பண்டரிநாதன் ஆகியோர் பேசினர்.

## காங்கயம் தி. மா. மு. கழகம்

16—7—54-ல், தோழர் திரு மோகன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், புதிய செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: கு. சிவப்பிரகாசன்; துணைச் செயலாளர்: கே. ராமகிருஷ்ணன்; பொருளாளர்: சதாசிவம்

தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

## முன்னெச்சரிக்கை!

பிரிட்டிஷ் கயானாவின் விடுதலை வீரர்களின் தலைவர் ஜெட்டி ஜெகன் மூன்று மாத சிறைத் தண்டனை அனுபவித்துவிட்டு விடுதலை பெறும்போது ஏற்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் 'சிறிய குழப்பங்களை'ச் சமிக்க, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட போலீஸ் காரர்களை அரசாங்கம் திரட்டியிருக்கிறதாம்!

## சீர்திருத்தத் திருமணங்கள்

9—7—54 காலை 10-30 மணியளவுக்கு கு. நா. கவுண்டன்பட்டி தோழர் கு மாணிக்கம்—தோழியர் வெ. சிரங்கத்திற்கும். தோழர் பி. மருதமுத்து—தோழியர் ஆராயிக்கும் தோழர் எம். எஸ். மணி தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் சி பி. சிற்றரசு, என். செமோதர் மணமக்களை வாழ்த்தி சொற்பொழிவாற்றினர். பின்னர், மணமக்களின் சார்பாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு தனித் தனியாக ரூ 3—மொத்தம் 6 ரூ நன்கொடை தோழர் எம். எஸ். மணி அவர்களிடம் கொடுக்கப்பட்டது — வரப்பெற்றோம்-நன்றியுடையது -பொறுப்பாளர்.

* * *

11—7—54ல், செல்லை எழும்பூர் மீனும்பாள் நகர் தாழ்த்தப்பட்டோர் நல உரிமைச் சங்க சார்பில் 38-வது வட்ட நாராண வசை கழக உறுப்பினர் தோழர் சே. மாணிக்கவாசகனார் தலைமையில் தோழர் சி கனேசனுக்கும்—தோழியர் ஆர். பத்மாவதிக்கும், தோழர் எம். ரத்தினம்—தோழியர் எம். பட்டம்மாளுக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றியுடையது-பொறுப்பாளர்.

## அன்பளிப்பு

மேற்காடு மல்லம் தோழர் ஆர். ரெத்தினம் அவர்கள் மூலம் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் —நன்றியுடையது—பொறுப்பாளர்.

## "சாக்ரடீஸ்" ஆண்டு நிறைவு விழா

சென்னை இராயபுரம் 2-வது வட்ட தி. மு கழக செயற்குழு உறுப்பினர் தோழர் மு. த. இளஞ்சேரன் அவர்களின் அன்புச்செல்வன் 'சாக்ரடீஸ்' பிறந்த தின ஓராண்டு நிறைவு விழா 23—7—54ல் கொண்டாடப்பட்டது. இதன் நினைவாக 'நம்நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

## பிறப்பு

22—7—54ல், அன்னிமங்கலம் தி. மு கழக உறுப்பினர் தோழர் க. அரசாமி அவர்களின் துணைவியார் குஞ்சம்மாளுக்கு ஒரு ஆண்மகவு பிறந்தது. குழந்தைக்கு 'வன்னிச்செல்வம்' என பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்-நன்றியுடையது—பொறுப்பாளர்.

## பெயர் சூட்டல்

உறையூர், ஜூலை 31—

18-7-54ல் உறையூர் தி. மு. க. சார்பில் தோழர் எம். எஸ். மணி தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் எஸ். ஆர். கே. சுப்ரமணியம் அவர்களின் ஆண் குழந்தைக்கு 'வில்லவன் கோதை' என்று பெயர் சூட்டினார். அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்-நன்றியுடையது-பொறுப்பாளர்.

## மதுரை இளங்கோ மன்றம்

25—7—54ல், தோழர் அ குருசாமி தலைமையில் மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, வரவு—செலவு பரிசீலிக்கும் பின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# டில்லியே, நியாயம் வழங்கு!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்னை போன்ற சுவரொட்டிகள் நாகர்கோவிலிலும், திரு-கொச்சி தமிழகப் பகுதி ஊர்களிலும் அலங்காரமாக ஒட்டப்பட்டிருக்கின்றன; பல சுற்றறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

தி. மு. க. துணைச் செயலாளர் கே. ஏ. மதியழகன், இரணியல், மிளகுமூடு, மார்த்தாண்டம் ஆகிய இடங்களுக்குச் சென்று அறப்போர் குறித்து தோழர்களிடம் கலந்து பேசினர்.

சனிக்கிழமையன்று முனிசிபல் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும், ஞாயிறன்று மார்த்தாண்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் தோழர் மதியழகன் பேசினர். "அடையாள மறியல்" குறித்து மக்களின் அமோக ஆதரவை விளக்குவதாய் அக்கூட்டங்கள் அமைந்தன.

தோழர் ஜான் அவர்களும், மற்ற தோழர்களும் இரவு பகலாக காரியங்கள் ஆற்றுவதில் ஈடுபட்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கும் "அடையாள மறியல்" திரு—கொச்சி தமிழக அரசியல் வரலாற்றில் ஓர் முக்கிய இடம் பெறுவதாய் இருக்கும் எனப் பேசிக்கொள்ளப்படுகிறது.

மறியல் ஏற்பாடுகளையெல்லாம் செய்துவிட்டு, தி மு க துணைச் செயலாளர் கே. ஏ. மதியழகன் சென்னை புறப்பட்டார்.

## பொதுக் கூட்ட நடவடிக்கைகள்

நாகர்கோவில், ஜுலை 30—

இன்று மாலை 2-மணிக்கு திரு-கொச்சி தமிழகப் போராட்டத்தை குறித்து அறிவதற்கும், திட்டங்கள் தீட்டுவதற்கும் தி. மு. கழக பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் துணைச் செயலாளர் கே. ஏ. மதியழகன், மதுரை என். முத்து, டி. வி. ராஜகோபால், திருச்சி முத்துக்கிருஷ்ணன் ஆகியோருடன் காரில் திருவாங்கூர்—கொச்சி எல்லையை வந்தடைந்தனர்.

திரு—கொச்சி எல்லை நுழைவாயிலாகிய ஆரல்வாய்மொழியில் நாஞ்சில் மாவட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் ஜான் அவர்களும் நூற்றுக்கணக்கான தோழர்கள் கொடிகள் தாங்கிய நான்கைந்து கார்களுடன் அண்ணாவை வரவேற்கக் காத்திருந்தனர்.

பொதுச்செயலாளர் அண்ணா அவர்களுக்கும், மதியழகனுக்கும் நாஞ்சில் மக்கள் சார்பாக மலர் மாலைகள் சூட்டப்பட்டன.

அங்கிருந்து அண்ணா அவர்களும், மதியழகனும் ஆரல்வாய்மொழி கிளைக்கழகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கிருந்து நேராக நாகர்கோவில் சென்றனர். வழியில் பல கிளைக் கழகங்களும், தோழர்களும், அண்ணா அவர்களுக்கு மலர் மாலைகள் சூட்டி வரவேற்றனர்.

நேராக கோட்டாறு தி மு கழக படிப்பகத்திற்கு பொதுச் செயலாளர் அண்ணா அவர்களும், மதியழகனும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கோட்டாறு தி மு க. சார்பில் நடைபெறும் படிப்பகத்தைப் பார்வையிட்டு, சிறிது நேரம் தங்கியிருந்து விட்டு, டிராவலர்ஸ் பங்களாவிற்குச் சென்று சிறிது நேரம் ஓய்வு பெற்றனர்.

மாலை 4 மணி முதல் 5½ மணி வரை வடசேரியில் நாஞ்சில் மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம் பொதுச் செயலாளர் அண்ணா தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள், திரு — கொச்சி தமிழக அரசியல் நிலைமையை தெளிவாக எடுத்துரைத்தனர்.

மாலை 7 மணிக்கு வடசேரி வஞ்சி ஆதித்தன் புதுத்தெருவில் அலங்காரமாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் தி. மு. க. பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது.

மாலை முதலே ஏராளமான கூட்டம் கூடிவிட்டபடியால் நிலைமை சமாளிக்க முடியாததாய் இருந்தது. இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கடல் தி மு கழகப் பொதுச் செயலாளரின் பேச்சைக் கேட்க குழுமியிருந்தனர்.

நாஞ்சில் மாவட்ட தி. மு கழகச செயலாளர் தோழர் ஜான் தலைமை தாங்கினர்.

பல கிளைக் கழகங்களின் சார்பிலும், தோழர்கள் சார்பிலும் பொதுச் செயலாளர் அண்ணா அவர்களுக்கு ஏராளமான மலர் மாலைகள் சூட்டப்பட்டன.

பிறகு துணைச் செயலாளர் தோழர் கே. ஏ. மதியழகன் பேசினர்.

அதன் பின்னர், பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் திரு—கொச்சி தமிழக அறப்போர் குறித்தும், சர்க்காரின் அடக்குமுறைப் போக்குக் குறித்தும், அறப்போரில் தி.மு.க பங்கு குறித்தும் உணர்ச்சி ததும்ப விக்கும் சொற்பொழிவாற்றினர்

நாகர்கோவிலிலேயே இப்படிப்பட்ட பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் இதற்கு முன்பு நிரண்டதில்லை என்று பொது மக்கள் பேசிக்கொண்டனர்.

★

## மார்த்தாண்டத்தில்

நாகர்கோவில், ஆக 1—

6-ந் தேதி நடைபெற இருக்கும் தி மு கழக அடையாள மறியல் சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகத் தங்கியிருக்கும் தி. மு. கழக துணைச் செயலாளர் கே ஏ மதியழகன் இன்று நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜான், துணைச் செயலாளர் பிச்சாண்டி, தோழர்கள் வள்ளிய பெருமாள், இராமசாமி ஆகியோருடன், இரணியல், மிளகுமூடு, மார்த்தாண்டம் ஆகிய இடங்களுக்குச் சென்று கிளைக் கழகத் தோழர்களைச் சந்தித்துப் பேசினர்.

இன்று மாலை 6 மணிக்கு மார்த்தாண்டத்தில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மார்த்தாண்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தை தோழர் கே. ஏ மதியழகன் துவக்கி வைத்து தி மு க. கொடியை ஏற்றி வைத்தார்.

மார்த்தாண்டம் பக்கத்திலுள்ள ஏராளமான கிராமங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான தோழர்கள் கலந்து கொண்டனர்.

மார்த்தாண்டம் தி மு கழகச் செயலாளர் தோழர் ஸ்ரீதரன் வரவேற்புரைக்குப் பின் தோழர் ஜான் தலைமை தாங்கி சொற்பொழிவாற்றினர்

தோழர் வள்ளிய பெருமாள் பேசிய பிறகு, தோழர் கே ஏ. மதியழகன் மிக விளக்கமாக திரு—கொச்சி தமிழக அறப்போர் குறித்தும், தி மு. கழகக் கொள்கை குறித்தும் பேசினர்

இந்தக் கூட்டம் மார்த்தாண்டம் வட்டாரத்திலே நல்ல எழுச்சியைக் கொடுத்துள்ளது; நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

★

## நாகர்கோவில் 2வது கூட்டத்தில் மதியழகன்

நாகர்கோவில், ஆகஸ்ட் 2—

நேற்று மாலை 8-மணிக்கு நாகர்கோவில் முனிசிபல் மைதானத்தில் நாஞ்சில் மாவட்ட தி மு க செயலாளர் தோழர் ஜான் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது

தி மு க. துணைச்செயலாளர் தோழர் கே. ஏ. மதியழகன் சொற்பொழிவாற்றினர். அவர் பேசுகையில், திரு-கொச்சி தமிழகப் போராட்டம் குறித்தும், அதில் தி மு.க. பங்கு குறித்தும் விளக்கினர்.

முந்தின நாள் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் அறிவித்த அறப்போர் அடையாள மறியல் குறித்தும், அதில் தி மு க தொண்டர்கள் நடந்துகொள்ள வேண்டியமுறை குறித்தும் எடுத்துக் கூறினர்.

கூட்ட முடிவில் பல தோழர்கள் அடையாள மறியலில் பங்கு கொள்ள தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டனர்.

(மதியழகன் சொற்பொழிவு பின்னர் வெளிவரும்)

# "தனி நாடு வேண்டும்"—நாகர்கள் கிளர்ச்சி வலுக்கிறது

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் உரிமைப் போர் தீயென வளர ஆரம்பித்தது!

இந்தக் கிளர்ச்சி வலுப்பதைக் கண்ட டில்லியும், ரங்கூனும் திகில் கொண்டன!

நேருவும், தக்கின் நூவும் சேர்ந்து அஸ்ஸாம் – பர்மா மலைப் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்தனர்.

இரு நாடுகளிலும், பத்திரிகையில் செய்திகள் போட்டு விளம்பரம் செய்து கொள்ளத்தான் பயன்பட்டதே தவிர, எள்ளளவும் மலைவாசிகளின் உரிமைக்குரலை இந்த இருபிரதமர்களின் சுற்றுப் பயணம் அடக்க முடியவில்லை! உரிமை வேட்கை வளர்ந்துகொண்டே இருந்தது—இருக்கிறது!

சமீபத்தில், இரண்டாண்டு ஆட்சிக்குப் பிறகு, இந்த ஐந்து மாவட்டக் குழுக்களின் தலைவர்களில் நால்வர் ஷில்லாங்கில் கூடி ஒரு மாநாடு நடத்தினர். டெல்லிக்கு மதிப்பு வைத்து ஆட்சி பீடமேறிய இந்த நால்வரும் கூட, மலை நாடுகளில் ஏற்பட்டிருக்கும் உரிமை உணர்ச்சியை அடக்க முடியாது என்பதை உணர்ந்து, இனி மலை நாடுகள் இந்திய அரசாங்கத்தின் கையிலிருக்க வேண்டுமானால், அவைகளை தனி மாகாணமாக்க வேண்டுமென, டெல்லி அரசாங்கத்திற்கு யோசனை கூறியிருக்கின்றனர்.

நான்கு தலைவர்களின் மாநாடு, பூட்டப்பட்ட அறைக்குள்ளே நடைபெற்றபோதிலும், முடிவில் மாநாட்டின் சார்பாக காசி, ஜெயந்தியா மலைநாட்டின் தலைவரான பி. எம். ராய் அவர்களின் கையெழுத்திட்ட அறிக்கை, "தனி மாகாணம் அமைத்து, உள்நாட்டில் பரிபூரண சுதந்திரம் கொடுத்தால் ஒழிய மலை நாட்டு மக்கள் திருப்தியடையமாட்டார்கள் என்று மாநாட்டில் நாங்கள் பேசி முடிவு செய்தோம்; இப்பொழுது இருக்கும் அஸ்ஸாமியர் அரசாங்கம், மலை ஜாதியினரின் பண்பு, கலாசாரம், மொழி, நாகரீகம் இவைகளைப் பற்றி தேவையான அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை; இது மலைவாசிகளுக்கு, அஸ்ஸாமியர் மீது வெறுப்பை உண்டாக்கியிருக்கிறது!" என்று கூறுகிறது.

நாக நாட்டினரின் 'தனி நாடு' முழக்கம், மற்ற நாட்டுக் குழுத் தலைவர்களை இந்த அளவுக்கு இறங்கிவரச் செய்திருக்கிறது. நேருவின் எடுபிடிகளே, தனி மாகாணம் தேவை, என்று கூற வேண்டிய அளவு நிலைமை வளர்ந்து விட்டது!

நிச்சயமாக, அஸ்ஸாம் மொழியை மலை நாடுகளில் புகுத்த முடியாது என்று கூறி விட்டனர், மாநாட்டிற்கு வந்திருந்த தலைவர்கள்!

அஸ்ஸாம் சட்டசபைக்கு வந்தமர்ந்த உறுப்பினர்கள் திரும்ப மலைநாட்டுக்கு போகவே அஞ்சுமளவு நிலைமை வளர்ந்து விட்டது!

வடகிழக்கு இந்திய காங்கிரஸ் தலைவர்களே கூட மலை நாடுகளடங்கிய மாகாணம் அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறுவதாக ஷில்லாங் பத்திரிகை நிருபர் ஒருவர் எழுதுகிறார்.

நாகர்கள் கிளர்ச்சி வலுக்கிறது!

அவர்கள், தனித் தன்மையாக நிற்கும் மலைகளில் வசிக்கும் பரம்பரையினர்! நவீன வசதிகள் இல்லாதவர்கள்! வெறும் பத்திரிகைகளும், பலமான கட்சியமைப்பும் கொண்டவர்களல்ல; ஆனால், ஒன்றில் மாத்திரம் உறுதிபூண்டு இருக்கின்றனர்—அதுதான் சுதந்திரம் பெற்ற மலைநாடு! அது குறைந்த எந்த வசதியை யார் கொடுத்தாலும் மதிக்க மறுக்கின்றனர்!

பிரிவினை கீதம்! அதிலே கிடைக்கும் இன்ப நாடு!

அதை அடைய நாகர்கள் முடிவு செய்து விட்டனர்.

அதற்கு, இரண்டு தென் கிழக்கு ஆசிய அரசுகளோடு போராட்டம்!

'முடியுமா?' என்று கேட்டால், 'கேட்பவர் முதுகெலும்பற்றவர்'—என்று கூறிவிட்டு, போர்க்களம் நோக்கிச் செல்கின்றனர், நாகர்!

அவர்கள் கிளர்ச்சி வளர்கிறது! வலுக்கிறது!

# கொழும்பு மாநாடு கூட்ட இலங்கை யோசனை!

## ஈடன் அழைப்பின் எதிரொலி

கொழும்பு ஆக. 2—

மேற்கத்திய நாடுகள் கூறும் தென்கிழக்கு ஆசிய ஒப்பந்தம் பற்றி கொழும்பு மாநாட்டின் நாடுகள் கலந்து பேச வேண்டுமென்று இலங்கை கூறுகிறது.

இது பற்றிய செய்தியை இந்தியா, பர்மா, இந்தோனேஷியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதம மந்திரிகளுக்கு அனுப்பியுள்ளதாக இலங்கை பிரதமர் கொத்தலாவலை கூறினர்.

நிருபர்களிடையே பேசும் போது அவர் மேலும் கூறியதாவது:—

"நாம் 60 கோடி மக்களின் பிரதிநிதிகளாவோம்; ஆகவே, நாம் தென் கிழக்கு ஆசியப் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி அவசர முடிவிற்கு வரக்கூடாது என்று எழுதியிருக்கிறேன்.

இது பற்றி நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை ஆலோசிக்க இந்தியாவில் நாம் கூடிப் பேசலாம் என்று கூறியிருக்கிறேன்

இந்தியாவில் வசதிகள் இல்லையென்றால், கொழும்பிலேயே அந்த மாநாடு நடைபெறலாம் என்று கொத்தலாவலை கூறினர்.

'சீட்டோ' பற்றி கொழும்பு மாநாட்டு உறுப்பினர் தேசங்களின் கருத்து இலங்கைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்றும், அவைகளின் விவரங்களைக் கூற முடியாதென்றும் கொத்தலாவலை கூறினர்.

கொத்தலாவலையின் இந்த யோசனை, 'சீட்டோ' பற்றிப் பேச ஆசிய நாடுகளுக்கு பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் ஈடனின் அழைப்பின் எதிரொலி என்று நம்பப்படுகிறது.

இம்மாதிரியான பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்ள இயலாது என்று ஈடனின் அழைப்பை இந்தியா மறுத்துவிட்டது.

இலங்கையும் இந்தியாவைப் பின்பற்றி ஈடனின் அழைப்பை மறுத்துவிடும் என்று தெரிகிறது.

# படை திரட்டி அனுப்பத் தயார்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான்!

திருவாங்கூர் த. நா. கா. அழைத்தாலும் சரி, இல்லையானாலும் சரி, திருவாங்கூர் தமிழகம் தாயகத்துடன் சேர நடக்கும் போராட்டத்தில் தி மு க. தனது பங்கைச் செலுத்தும்.

தி. த. நா. கா. தலைவர்களுடன் போராட்டத்திற்காக சமரசத்திற்கு வர எனக்கு என்ன கட்டளை கிடைத்தாலும் அதை நிறைவேற்றத் தயாராக இருக்கிறேன்.

பண்டைய தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலிருக்கும் படை திரட்டி, கால் நடையாக அனுப்பி வைக்கத் தயார்!

பணமா தேவை—அதற்காக நாங்கள் தெருக்கூத்து நடத்தி பணம் திரட்டித் தருகிறோம்."

## நஷ்ட ஈடு!

1951-ம் ஆண்டில் தேசிய மயமாக்கப்பட்ட வெள்ளைப்பரின் ஆங்கிலோ-ஈரானிய எண்ணெய்க் கம்பெனிக்கு, பாரசீக அரசாங்கம் 3 கோடி பவுனுக்கும் குறைவாக நஷ்ட ஈடாகத் தரும் எனத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (இல., நாராயண செட்டித் தெரு இராயபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம்.ஏ.